©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண்.TN/CCN/467/2012-14
[நி.மு. எண்.197/2009.
[விலை ரூ.3.20 பைசா

**தமிழ்நாடு அரசு அரசிதழ்**
**அசாதாரணம்** **அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது**

எண்.423] சென்னை, வெள்ளி, டிசம்பர் 29, 2017

மார்கழி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

**பகுதி III –பிரிவு 1(அ)**

## தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொதுசட்ட விதிமுறைகள், அறிவிக்கைகள், ஆணைகள், ஒழுங்குமுறை நெறிகள், இன்னபிற.

## அரசின் அறிவிக்கைகள்

## வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017க்கு திருத்தம்
*[அ.ஆ. நிலை. எண்.187, வணிக வரி மற்றும் பதிவு (ஆ1), 29 டிசம்பர் 2017,*
*மார்கழி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048]*

**எண். எஸ்ஆர்ஒ அ–60 (ஆ–1)/2017.**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ல் 19)–ன் பிரிவு 164–ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, தமிழக ஆளுநரால், 2017 ஆகஸ்டு 30–ஆம் தேதியிட்ட தமிழக அரசின் அரசிதழ் அசாதாரணத்தில் பிரிவு 1(அ) பகுதி III–ன் பக்கங்கள் 1–14 ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண்.எஸ்ஆர்ஒ அ–40(அ) / 2017 ல் வரிசை எண் 2(vii) மற்றும் 2(viii) ன் விதிமுறைகள் செயலுக்கு வரும் நாளாக 2018 பிப்ரவரி 1 –ஆம் தேதி இதன் மூலம் நியமிக்கப்படுகிறது.

*[அ.ஆ. நிலை. எண்.188, வணிக வரிகள் மற்றும் பதிவு (ஆ1), 29 டிசம்பர் 2017,*
*மார்கழி 14, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048]*

**எண். எஸ்ஆர்ஒ அ–60 (ஆ–2)/2017.**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 2017–ல் 19)ன் பிரிவு 164 ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, தமிழ்நாடு ஆளுநரால், தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் விதி–2017க்கு மேலும் திருத்தம் செய்ய இதன் மூலம் பின்தொடரும் விதிகள் ஏற்படுத்தப்படுகிறது, அதாவது:–

(1). இந்த விதிகளை தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (பன்னிரெண்டாவது திருத்தம்) விதிகள், 2017 என்று அழைக்கலாம்.

(2). இல்லையெனில் குறிப்பிடப்பட்டவை தவிர, அலுவல்முறை அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியில் அவை நடைமுறைக்கு வரும்.

2. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள், 2017–ல்

(i). விதி 17 ல், உப விதி (1)க்கு பிறகு, பின்தொடரும் உப விதி இடைசேர்க்கப்பட வேண்டும், அதாவது :–

"(1அ) மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (மத்திய சட்டம் 2017–ல் 12) –ன் கீழ் வழங்கப்பட்ட தனித்துவ அடையாள எண்ணானது, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017–ல் 19) ன் கீழ் வழங்கப்பட்டதாக கருதப்பட வேண்டும்".

(ii). விதி 19–ல், உப விதி (1)–க்கு பிறகு, பின்தொடரும் உப விதி இடைசேர்க்கப்பட வேண்டும், அதாவது:–

"(1அ) உப விதி (1)ல் உள்ள எதுவாக இருந்தாலும், காரணங்கள் எழுத்துபூர்வமாக பதிவு செய்யப்பட்ட ஆணையரின் ஆணையுடன் மேலும் கூறப்பட்டுள்ள அந்த ஆணையில் ஆணையரால் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டது தவிர, பொது வலைவாயிலில் படிவம் ஜிஎஸ்டி ஆர்இஜி– 14ல் விண்ணப்பத்தினை சமர்பிக்கும் தேதிக்கு முன்பான தேதியில் பதிவுக்கான விண்ணப்பத்திற்கான எந்த ஒரு விவரத்தையும் திருத்த முடியாது".

(iii). 2017 அக்டோபர் 23 ல் செயலுக்கு வருமாறு விதி 89 ல் உப விதி(4) க்காக பின்தொடர்பவை மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:–

"(4) ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017 (மத்திய சட்டம் 2017 ல் 13)ன் பிரிவு 16–ன் உப பிரிவு (3) ல் உள்ள விதிமுறைகளுக்கிணங்க வரி செலுத்தாமல் பிணைப் பத்திரம் அல்லது பொறுப்பேற்கும் கடிதத்தின் கீழ் பூஜ்ய வீத சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்கல்களின் நேர்வில் பின்தொடரும் சூத்திரத்தின் மூலம் உள்ளீட்டு வரி வரவின் திருப்புத் தொகை வழங்கப்பட வேண்டும்.

திருப்புத் தொகையின் தொகை = (சரக்குகளின் பூஜ்ய வீத வழங்கலின் மொத்த தொகை + சேவைகளின் பூஜ்ய வீத வழங்கலின் மொத்த தொகை) x நிகர ஐ.டி.சி ÷ சரிசெய்யப்பட்ட மொத்த மொத்த தொகை.

எந்த இடத்தில் :-

(அ) "திருப்புத் தொகையின் தொகை" என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்சமான திருப்புத் தொகை என பொருள்படும்.

(ஆ) "நிகர ஐடிசி" என்பது உப விதிகள் (4அ) அல்லது 4(ஆ) அல்லது இரண்டிற்கும் கீழ் கோரப்பட்ட திருப்புத் தொகை, துய்க்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு நீங்கலான உரிய காலத்திற்குள் உள்ளீடுகள் மற்றும் உள்ளீட்டு சேவைகள் மீது துய்க்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு என பொருள்படும்.

(இ) ''சரக்குகளின் பூஜ்ய வீத வழங்கலின் மொத்த தொகை" என்பது உப விதிகள் 4(அ) அல்லது 4(ஆ) அல்லது இரண்டிற்கும் கீழ் திருப்புத் தொகை கோரப்பட்டதன் தொடர்பான வழங்கல்களின் மொத்த தொகை தவிர, வரி செலுத்தாமல் பிணைப் பத்திரம் அல்லது பொறுப்பேற்கும் கடிதத்தின் கீழ் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சரக்குகளின் பூஜ்ய வீத வழங்கலின் மதிப்பு என பொருள்படும்.

(ஈ)''சேவைகளின் பூஜ்ய வீத வழங்கலின் மொத்த தொகை" என்பது பிணைப்பத்திரம் அல்லது ஒரு பொறுப்பேற்கும் கடிதத்தின் கீழ் வரி செலுத்தாமல் மேற்கொண்ட சேவைகளின் பூஜ்ய வீத வழங்கலின் மதிப்பு என பொருள்பட்டு பின்தொடரும் முறையில் கணக்கிடப்படும், அதாவது:-

சேவைகளின் பூஜ்ய வீத வழங்கல் என்பது சேவைகளின் பூஜ்ய வீத வழங்கலுக்காக தொடர்புடைய காலத்தில் பெறப்பட்ட மொத்த தொகை வழங்கலின் மற்றும் தொடர்புடைய காலத்திற்கு முன்னதாக உள்ள எதாவது காலத்தில் சேவைகளின் பூஜ்ய வீத வழங்கல்களின் வழங்கல் முடிவுற்று அதற்காக பெறப்பட்ட முன்பணத்திலிருந்து, தொடர்புடைய காலத்தில் முடிக்கப்படாத சேவைகளின் வழங்கல்களுக்கான பூஜ்ய வீத சேவைகளின் வழங்கல்களுக்காக பெறப்பட்ட முன் தொகையானது குறைக்கப்படும்.

(உ) "சரி செய்யப்பட்ட மொத்த தொகை'' என்பதன் பொருளானது பிரிவு (2) ன் கூறு (112) ன் கீழ் வரையறுக்கப்பட்டபடி மாநிலத்தின் அல்லது ஒருங்கிணந்த ஆட்சிப்பகுதியின் மொத்த தொகை ஆகும், நீங்கலானவை –

(அ) பூஜ்ய வீத வழங்கல் தவிர விலக்களிக்கப்பட்ட வழங்கல்களின் மதிப்பு மற்றும்

(ஆ) உப விதிகள் (4அ) அல்லது 4(ஆ) அல்லது இரண்டிற்கும் கீழ், தொடர்புடைய காலத்தில் திருப்புத் தொகை கோரப்பட்டதன் தொடர்புடைய வழங்கல்களின் மொத்தத் தொகை ஏதேனும் இருப்பின்;

(ஊ) ''தொடர்புடைய காலம்'' என்பதன் பொருளானது கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட அந்த காலம் ஆகும்.

(4அ) 2017 அக்டோபர் 18ஆம் தேதியிட்ட தமிழக அரசின் அரசிதழ் அசாதாரணத்தில் பகுதி II பிரிவு 2–ன் பக்கம் 2 ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண். II(2)/சிடிஆர்/868(ஊ–2)/2017 ன் அனுகூலங்களை துய்க்கும்படியான வழங்கல்களை வழங்குநர் பெறும் நேர்வில், சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் பூஜ்ய வீத வழங்கல் மேற்கொள்ள உபயோகப்படுத்தப்பட்ட வேறு உள்ளீடுகள் அல்லது உள்ளீட்டு சேவைகள் தொடர்பாக துய்க்கப்பட்ட உள்ளீட்டு வரிவரவின் திருப்புத் தொகை வழங்கப்பட வேண்டும்.

(4ஆ) 2017 அக்டோபர் 23ம் தேதியிட்ட தமிழக அரசின் அரசிதழ் அசாதாரணத்தில் பகுதி II பிரிவு 2–ன் பக்கங்கள் 1–2 ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண் II(2)/சிடிஆர்/868(ஈ)/2017 ன் அல்லது 2017 அக்டோபர் 23ம் தேதியிட்ட அறிவிக்கை எண்.41 / 2017–ஒருங்கிணைந்த வரி (வீதம்) அல்லது இரண்டிமோ, இவற்றின் அனுகூலங்களை துய்க்கும்படியான வழங்கல்களை வழங்குநர் பெறும் நேர்வில், சரக்குகள் கூறப்பட்ட அறிவிக்கையின் கீழ் ஏற்றுமதிக்காக பெறப்பட்ட உள்ளீடுகள் தொடர்பான உள்ளீட்டு வரி வரவு

துய்க்கப்பட்டதற்கான மேலும் சரக்குகளின் அத்தகைய ஏற்றுமதியை மேற்கொள்வதற்கு உபயோகப்பட்ட அளவிற்கான வேறு உள்ளீடுகள் மற்றும் உள்ளீட்டு சேவைகள் தொடர்பான உள்ளீட்டு வரிவரவின் திருப்புத்தொகையும் அளிக்கப்பட வேண்டும்.

(iv) விதி 95 ல்

(அ) உப விதி (1) க்கு, பின்தொடரும் உப விதி மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது:-

‘‘(1) பிரிவு 55 ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையின் படி எந்த ஒரு நபருக்கு அவரது உள்ளீடு வழங்கல்களின் மீது செலுத்தப்பட்ட வரியினை திருப்புத் தொகையாக கோருவதற்கு தகுதியுள்ளதோ, படிவம் ஜிஎஸ்டிஆர்–11 ல் சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் உள்வழங்கலுக்கான அறிக்கையுடன், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்பட்ட வசதிசெய்யும் மையம் மூலமாகவோ, பொது வலை வாயிலில் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு முறை படிவம் ஜிஎஸ்டி ஆர்எப்டி–10ல் திருப்புத் தொகைக்காக விண்ணப்பிக்கலாம்.

(ஆ) உப விதி (3) ன் கூறு (அ)–ல் ‘‘மற்றும் ஏதேனும் வரி செலுத்தியது நீங்கலாக ஒரு வரி விலைப்பட்டியலின் கீழான வழங்கலின் விலை ஐந்தாயிரம் ரூபாய்க்கு மிகுதியானால்’’ என்ற வார்த்தைகள் விடப்பட வேண்டும்.

V. விதி (96)–ல் 2017 அக்டோபர் 23 முதல் செயலுக்கு வருமாறு–

(அ) தலைப்பினில், ‘‘சரக்குகளின் மேல் செலுத்தப்பட்ட’’ என்ற வார்த்தைகளுக்கு பிறகு, ‘‘அல்லது சேவைகள்’’ என்ற வார்த்தைகள் இடை சேர்க்கப்பட வேண்டும்.

(ஆ) உப விதி (8)–ற்கு பிறகு, பின்தொடரும் உப விதி இடை சேர்க்கப்பட வேண்டும். அதாவது–

(9) சரக்குகள் அல்லது சேவைகளின் ஏற்றுமதிக்காக செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த வரியின் திருப்புத் தொகையை கோரும் நபர்கள், அல்லது 2017 அக்டோபர் 18 தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணத்தில் பகுதி–II ன் பிரிவு 2 ல் பக்கம்–2 ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அறிவிக்கை எண். II(2)/சிடிஆர்/868(ஊ–2)/2017 அல்லது 2017 அக்டோபர் 23 தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணத்தில் பகுதி–II ன் பிரிவு 2 ல் பக்கம்–1–2 ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண். II (2)/சிடிஆர்/868(ஈ)/2017, அல்லது 2017 அக்டோபர் 23 தேதியிட்ட அறிவிக்கை எண்.41/2017– ஒருங்கிணைந்த வரி (வீதம்) ன் கீழ் அனுகூலங்களை துய்க்கும்படியான வழங்கல்களை வழங்குநர் பெற்றிருக்கக் கூடாது.

(vi) படிவம் ஜிஎஸ்டி ஆர்இஜி–10 க்கு, பின்தொடரும் படிவம் மாற்றீடு செய்யப்பட வேண்டும், அதாவது :-

**படிவம் ஜிஎஸ்டி ஆர்இஜி–10**

(விதி 14(1) ஐ பார்க்க)

**பதிவு செய்யப்பட்ட நபரைத் தவிர இந்தியாவில் உள்ள ஒரு நபருக்கு, இந்தியாவிற்கு வெளியில் ஒரு இடத்திலிருந்து நிகழ்நிலை தகவல் மற்றும் தரவுதள அணுகல் அல்லது மீட்பு சேவைகளை வழங்குகின்ற நபரின் பதிவுக்கான விண்ணப்பம்.**

**பகுதி–அ**

| | | |
|---|---|---|
| (i) | நபரின் சட்டபூர்வ பெயர் | |
| (ii) | வரி அடையாள எண் அல்லது தனித்துவ எண், இவற்றில் எதன் அடிப்படையில் அந்த நிறுவனம் அந்த நாட்டின் அரசாங்கத்தால் அடையாளம் காணப்படுகிறதோ அது | |
| (iii) | அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் பெயர் | |
| (iv) | அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் மின்னஞ்சல் முகவரி | |
| (v) | இந்தியாவில் நியமிக்கப்பட்ட பிரதிநிதியின் பெயர், ஏதேனும் இருப்பின் | |
| | (அ) இந்தியாவில் உள்ள பிரதிநிதியின் நிரந்தர கணக்கு எண் | |
| | (ஆ) இந்தியாவில் உள்ள பிரதிநிதியின் மின்னஞ்சல் முகவரி | |
| | (இ) இந்தியாவில் உள்ள பிரதிநிதியின் கைபேசி எண் (+91) | |
| குறிப்பு :- பகுதி –“ஆ” வினை பூர்த்தி செய்வதை தொடர்வதற்கு முன்பாக மேலே சமர்பித்துள்ள பொருத்தமான விவரங்கள் நடைமுறைக்கு சாத்தியமானால் நிகழ்நிலையில் சரிபார்க்கப்படும். | | |

பகுதி–ஆ

| | | | |
|---|---|---|---|
| **1.** | அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் விவரங்கள் | | |
| | முதல் பெயர் | நடு பெயர் | கடை பெயர் |
| | புகைப்படம் | | |
| | பாலினம் | | ஆண்/பெண்/மற்றவை |
| | பதவி | | |
| | பிறந்த தேதி | | தேதே/மாமா/வவவவ |
| | தந்தையின் பெயர் | | |
| | குடியுரிமை | | |
| | ஆதார், ஏதேனும் இருப்பின் | | |

<table>
<tr><td rowspan="3"></td><td colspan="3" rowspan="3">அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் முகவரி</td><td colspan="3">முகவரி வரி 1</td></tr>
<tr><td colspan="3">முகவரி வரி 2</td></tr>
<tr><td colspan="3">முகவரி வரி 3</td></tr>
<tr><td>2</td><td colspan="3">இந்தியாவில் நிகழ்நிலை சேவையினை துவங்கிய தேதி</td><td colspan="3">தேதே/மாமா/வவவவ</td></tr>
<tr><td>3</td><td colspan="6">வரிவிதிப்புக்குட்பட்ட சேவைகள் எந்த வலைதளத்தின் மூலம் கொடுக்கப்படுகிறதோ அதன் இடம் காண்பதற்கான சீரான வழிமுறை வலைதள முகவரிகள் (URL)<br>1.<br>2.<br>3.</td></tr>
<tr><td>4</td><td colspan="2">செயல் எல்லை</td><td>மையம்</td><td colspan="3">பெங்களூரு மேற்கு, மசசேவ ஆணையரகம்</td></tr>
<tr><td rowspan="3">5</td><td colspan="6">இந்தியாவில் உள்ள பிரதிநிதியின் வங்கியின் கணக்கு விவரங்கள் (நியமிக்கப்பட்டால்)</td></tr>
<tr><td>கணக்கு எண்</td><td colspan="2"></td><td>கணக்கு வகை</td><td colspan="2"></td></tr>
<tr><td>வங்கியின் பெயர்</td><td></td><td>கிளை முகவரி</td><td></td><td>ஐஎப்எஸ்சி (IFSC)</td><td></td></tr>
<tr><td>6</td><td colspan="6">பதிவேற்றப்பட்ட ஆவணங்கள்<br>படிவத்தில் உள்ள களத்தின் மதிப்பிற்கிணங்க தேவைப்படும் தனிப்பயனாக்கப்பட்ட ஆவணங்களின் பட்டியலினை பதிவேற்றம் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது. (அறிவுரையில் காண்க)</td></tr>
<tr><td>7</td><td colspan="6">உறுதிப்படுத்தல்<br>மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனது நுண்ணறிவிற்கும், நம்பிக்கைக்கும் தெரிந்த வகையில் உண்மை மற்றும் சரியானது எனவும், விடுதல்கள் மற்றும் மறைத்தல்கள் ஏதுமில்லை என்பதை உளமாற அறிவிக்கின்றேன்.<br>நான்......... பதிவு பெற்றவருக்காக கையொப்பமிட அதிகாரம் பெற்றுள்ளேன் என்பதை இதன் மூலம் உறுதி அளிக்கின்றேன். வரி விதிப்புக்குட்பட்ட நிலப்பகுதியில் அமைந்த வரிவிதிப்புக்குட்படாத நிகழ்நிலை பெறுநரிடமிருந்து பொருப்பிணை மற்றும் பொறுப்புள்ள வரியினை வசூல் செய்து மேலும் அதனை இந்திய அரசிற்கு செலுத்துவேன்.<br><br>இடம்: கையொப்பம்<br>தேதி: அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் பெயர்<br>பதவி</td></tr>
</table>

குறிப்பு: விண்ணப்பதாரர் உறுதிமொழியுடன், கடவுச்சீட்டின் ஒளி பிரதி மற்றும் புகைப்படத்துடன் பதிவேற்றுவது தேவைப்படும் (கீழே குறிப்பிடப்பட்ட படிவத்தின்படி)

ஆதாரமாக பதிவேற்றப்பட வேண்டிய ஆவணங்கள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 1 | இந்தியாவில் உள்ள பிரதிநிதியின் வியாபார இடத்தின் ஆதாரம், ஏதேனும் இருப்பின்,<br><br>(அ) உரிமையுடைய வளாகத்திற்கு–<br>வளாகத்தின் உரிமைக்கு ஆதரவாக சமீபத்தில் செலுத்திய சொத்துவரி சீட்டு அல்லது நகராட்சி கட்டா நகல் அல்லது மின்கட்டண சீட்டின் நகல் போன்ற ஏதாவது ஒரு |

| | |
|---|---|
| | ஆவணம்.<br>(ஆ) வாடகை அல்லது குத்தகை வளாகத்திற்கு—<br>செல்லத்தக்க வாடகை/குத்தகை ஒப்பந்த நகல்களுடன் வளாகத்தை குத்தகை கொடுப்பவரின் உரிமைக்கு ஆதரவாக, சமீபத்தில் செலுத்திய சொத்துவரி சீட்டு அல்லது நகராட்சி கட்டா நகல் அல்லது மின்கட்டண சீட்டின் நகல் போன்ற ஏதாவது ஒரு ஆவணம்.<br><br>(இ) மேலே உள்ள (அ) மற்றும் (ஆ)—இல் உள்அடங்காத வளாகங்களுக்கு—<br>இசைவு கடித நகலுடன் வளாகத்தை இசைவளிப்பவர் உரிமைக்கு ஆதரவாக, நகராட்சி கட்டா நகல் அல்லது மின்கட்டண சீட்டின் நகல் போன்ற ஏதாவது ஒரு ஆவணம்.<br>பங்கீடப்பட்ட சொத்துக்களுக்கும், இதே ஆவணங்களை பதிவேற்றம் செய்யலாம். |
| 2 | ஆதாரம் :<br>வசிப்பிடமில்லா வரி செலுத்துபவரின் கடவுச்சீட்டின் ஒளி பிரதியுடன் விசா (VISA) விவரங்கள். நிறுவனம் / சங்கம் / LLP / FCNR / இதரவற்றிற்காக பகர அதிகார பத்திரம் வைத்துள்ள நபர், அதிகாரம் அளிக்கப்பட்ட கடிதத்துடன்.<br>இந்தியாவில் அல்லது இந்தியாவிற்கு வெளியிலோ பதிவுபெற்றிருந்தால் இணைப்பாக்கச் சான்றின் ஒளி பிரதி.<br>தோன்றிய நாட்டில் வழங்கப்பட்ட உரிமத்தின் ஒளி பிரதி.<br>இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தடை நீக்க சான்றிதழின் ஒளி பிரதி. |
| 3 | வங்கிக் கணக்கு தொடர்பான சான்றுகள் :<br>உரிமையாளர் அல்லது வணிக நிறுவனத்தின் பெயரில் உள்ள, வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் ஒளி பிரதி அல்லது வங்கி அறிக்கையின் தொடர்புடைய பக்கம், வங்கி கணக்கு புத்தகத்தின் தொடக்க பக்கம், கணக்கு எண், கணக்கு வைத்திருப்பவரின் பெயர், எம்ஐசிஆர் (MICR), ஐஎப்எஸ்சி (IFSC) மற்றும் கிளையின் விவரங்கள். |
| 4 | இந்தியாவில் பிரதிநிதியின் நியமனம் குறித்த ஆவணங்களின் ஒளி பிரதி நகல், பொருந்தினால். |
| 5 | **அதிகாரமளிக்கும் படிவம்** :<br>விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரருக்கு, அதிகாரமளிக்கும் அல்லது இயக்குநர் குழு அல்லது நிர்வாக குழுவின் தீர்மானத்தின் நகலினை பின்தொடரும் படிவத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.<br>**அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் உறுதிமொழி (ஒவ்வொரு கையொப்பதாரருக்கும் தனித்தனியாக)**<br><br>நான் ........(மேலாண் இயக்குநர் / முழுநேர இயக்குநர் / முதன்மை செயல் அலுவலர் அல்லது பகர அதிகார பத்திரம் வைத்திருப்பவர்) இதன் மூலம் உறுதிப்படுத்தி அறிவிப்பது என்னவென்றால் <<அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர் பெயர்>> அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரராக இந்த வணிகத்திற்கு << வணிகத்தின் பெயர்>> அதற்காக தாக்கல் செய்யப்பட்ட பதிவிற்கான விண்ணப்பம் / தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 2017 ல் 19)—ன் கீழ் பதிவு பெற்றவர். |

அன்னாரது வணிகம் தொடர்புடைய அனைத்து செயல்பாடுகளும் என்னை /எங்களை கட்டுப்படுத்தும்.

பொறுப்பில் உள்ள நபர்களின் கையொப்பங்கள்

| வ. எண் | முழுப்பெயர் | பதவி/ நிலை | கையொப்பம் |
|---|---|---|---|

**அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரராக ஏற்றுக் கொள்ளுதல்**

நான் << (அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் பெயர் >> மேலே குறிப்பிட்டுள்ள வியாபாரத்திற்கான அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரராக செயல்படுவதற்கும், எனது அனைத்து நடவடிக்கைகளும் வணிகத்தை கட்டுப்படுத்தும் என, எனது ஒப்புதலுடன் உடன்படுகிறேன்.

இடம் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் கையொப்பம்
தேதி (பெயர்)
பதவி/நிலை

நெறிமுறைகள்–

1. அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர் இந்தியாவில் இல்லாதவர் எனில், அத்தகைய நபர்களுக்கு எண்சார் கையொப்ப சான்றிதழ் மூலமான உறுதிபடுத்துதல் கட்டாயம் அன்று. மின்னணு சரிபார்ப்பு குறுயீடு (EVC) மூலம் உறுதிபடுத்துதல் செய்யப்படும்.

2. ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017–ன் பிரிவு 14–ன்கீழ் குறிப்பிடப்பட்ட விளக்கத்தின்படி இந்தியாவில் நியமிக்கப்பட்ட பிரதிநிதி இருப்பார்.

(vii) படிவம் ஜிஎஸ்டி ஆர்இஜி–13ல்,

அ. பகுதி–ஆ–ல், வரிசை எண்.4–ல் ''மாநிலத்திலுள்ள நிறுவனத்தின் முகவரி'' என்ற வார்த்தைகளுக்கு '' மையப்படுத்தப்பட்ட யூஐஎன்(UIN)ஐ பெறும் தொடர்புடைய நிறுவனத்தின் முகவரி'' என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்.

ஆ. நெறிமுறைகளில், ''தனித்துவமான அடையாள எண் (UIN) பெற வேண்டிய ஒவ்வொரு நபரும் மின்னனு முறையில் விண்ணப்பத்தை சமா்ப்பிக்க வேண்டும்'' என்ற வார்த்தைகளுக்கு ''தனித்துவமான அடையாள எண்(UIN) பெறவேண்டிய ஒவ்வொரு நபரும் மின்னனு முறையில் அல்லது வேறுவகையில் விண்ணப்பத்தை சமா்ப்பிக்க வேண்டும்'' என்ற வார்த்தைகள் மாற்றீடு செய்யப்படவேண்டும்.

(viii) படிவம் ஜிஎஸ்டிஆர்-11 க்கு, பின்வரும் படிவம் மாற்றீடு செய்யப்படவேண்டும், அதாவது–

**படிவம் ஜிஎஸ்டிஆர்-11**
**(விதி 82 ஐ பார்க்க)**
**துனித்துவ அடையாள எண் (UIN) கொண்ட நபர்களின் உள் வழங்கல் அறிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு | | | | |
| வரிக் காலம் | | | | |

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | த.அ.எ(UIN) | | | | | | | | | | | | | | | |
| 2 | த.அ.எ(UIN) வைத்திருக்கும் நபரின் பெயர் | தானாக தோன்றும் | | | | | | | | | | | | | | |

3. பெறப்பட்ட உள் வழங்கல்களின் விவரங்கள்

(அனைத்து அட்டவணைகளுக்கும் தொகை ரூபாயில்)

| வழங்குபவரின் சமசேவ அள | விலைப்பட்டியல்/ பற்றுக்குறிப்பு / வரவு குறிப்பு விவரங்கள் | | | வீதம் | வரி விதிக்கத் தக்க விலை மதிப்பு | வரித்தொகை | | | | வழங்கல்களின் இடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | தேதி | விலை மதிப்பு | | | ஒருங்கிணைந்த வரி | மைய வரி | மாநில வரி/ ஒ.ஆ.ப. வரி | மேல்வரி | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 3அ. பெறப்பட்ட விலைப்பட்டியல்கள் | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| 3ஆ. பெறப்பட்ட பற்று / வரவு குறிப்பு | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

**<u>உறுதிபடுத்தல்</u>**

நான் ________இதன் மூலம்,                          மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனது நுண்ணறிவிற்கும், நம்பிக்கைக்கும் தெரிந்த வகையில் உண்மை மற்றும் சரியானது எனவும், விடுதல்கள் மற்றும் மறைத்தல்கள் ஏதுமில்லை என்பதை உளமாற அறிவிக்கின்றேன்.

கையொப்பம்

இடம்: அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் பெயர்

தேதி: பதவி / தகுதி நிலை

நெறிமுறைகள்–

1..பயன்படுத்திய சொற்கள்–

அ,  GSTIN –சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அடையாள எண்

ஆ.  UIN – தனித்துவ அடையாள எண்

2.தனித்துவ அடையாள எண் ஒதுக்கீடு செய்யப்ப்பட்ட அதே மாநிலத்தில் திருப்புத்தொகைக்கான விண்ணப்பத்தினை தாக்கல் செய்ய வேண்டும்.

3.கோரிய திருப்புத் தொகையின் பொருட்டு அத்தகைய விலைப்பட்டியல்கள் திருப்புத் தொகை நோக்கத்திற்காக மட்டும் உள்ளிடப்படலாம்.

(ix) படிவம் ஜிஎஸ்டி ஆர்எப்டி-10க்காக பின்தொடரும் படிவம் மாற்றீடு செய்யப்படுகிறது. அதாவது,

**படிவம் ஜிஎஸ்டி ஆர்எப்டி -10**
**(விதி 95(1) ஐ பார்க்க)**

**ஐநாவின் தனிச்சிறப்பு அமைப்பு அல்லது எந்த ஒரு பல்நோக்கு நிதி அமைப்பு மற்றும் நிறுவனம் மற்றும் வெளிநாடுகளின் தூதரகம் மற்றும் துணைத் தூதரகம் இதரவற்றிற்கான திருப்புத்தொகை விண்ணப்பம்**

1. தஅஎண் (UIN)
2. பெயர்
3. முகவரி
4. வரி காலம் (காலாண்டு)  தேதே/மாமா/வவவவ லிருந்து தேதே/மாமா/வவவவ வரை
5.
6. ஏஆர்என்(ARN) மற்றும் ஜிஎஸ்டிஆர்-11 தேதி  ARN<---------- >தேதி <DD/MM/YY >
7. திருப்புத் தொகையாக கோரப்படும் தொகை  <ஐஎன்ஆர்> <எழுத்தால்>

| மாநிலம் | மத்திய வரி | மாநில வரி/ ஒஆப வரி | ஒருங்கிணைந்த வரி | மேல்வரி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

7.வங்கிக் கணக்கு விவரங்கள்

அ. வங்கிக் கணக்கு எண்

ஆ. வங்கிக் கணக்கு வகை

இ. வங்கியின் பெயர்

ஈ கணக்கு வைத்திருப்பவர்/ இயக்குபவர் பெயர்

உ. வங்கி கிளையின் முகவரி

ஊ.ஐஎப்எஸ்சி ( IFSC)

ஏ. எம்ஐசிஆர் (MICR)

8. உறுதிப்படுத்தல்

< தூதரக / சர்வதேச அமைப்புகள் பெயர் > அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஆகிய நான் இதன் மூலம் மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனது நுண்ணறிவிற்கும், நம்பிக்கைக்கும் தெரிந்த வகையில் உண்மை மற்றும் சரியானது எனவும், விடுதல்கள் மற்றும் மறைத்தல்கள் ஏதுமில்லை என்பதை உளமாற அறிவிக்கின்றேன்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் குறிப்பிடப்பட்ட முகமை / பல்நோக்கு நிதி அமைப்பு மற்றும் நிறுவனம் / வெளிநாடுகளின் தூதரகம் மற்றும் துணைத் தூதரகம் இதர பிற நபர்கள் / குறிப்பிடப்பட்ட வகுப்பின் நபர்கள் / அரசால் அறிவிக்கை செய்யப்பட்டவர்களாகிய நாங்கள் அந்த திருப்புத் தொகை கோரிக்கைக்காக தகுதி பெற்றவர்கள்.

இடம் — அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர் கையொப்பம்
தேதி — பெயர்

பதவி/நிலை

நெறிமுறைகள் –

**1.**திருப்புத் தொகைக்கான விண்ணப்பமானது காலாண்டு அடிப்படையில் தாக்கல் செய்ய வேண்டும்.

**2.** ஜிஎஸ்டிஆர்-11 -ன் அட்டவணை–**3**ல் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களிலிருந்து அட்டவணை எண்– **6** தானாக தோன்றும்.

**3.**தகுதியுள்ள திருப்புத்தொகையின் தொகையினை திருத்துவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

**4.**திருப்புத் தொகை வசதிக்காக வழங்கப்பட்ட MEA-ஆல் வழங்கப்பட்ட அவசியமான சான்றிதழ் திருப்புத் தொகையின் கோரிக்கையினை செயல்படுத்துவதற்காக உரிய அலுவலர் முன் அளிக்கப்பட வேண்டும்.

(x) படிவம் ஜிஎஸ்டி டிஆர்சி–**07**ல், வரிசை எண்.**5**–ல் உள்ள அட்டவணையை விட்டுவிட வேண்டும்.

முனைவர் ச.சந்திரமௌலி,
அரசின் கூடுதல் தலைமை செயலாளர் ( முகூபொ)